25 ஜூலை 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 17 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**உங்கள் வாயைத் திறந்து ஒடுக்கப்பட்டவர்களைக் காத்தல்**

# இயலாத ஒன்றை செய்து முடிக்க கடவுளால் இயலும்!

“ஆண்டவர் வழங்குவார்” என்ற செய்தி, இன்றைய வாசகங்களில் இழையோடியிருக்கும் முக்கிய கருப்பொருள். அங்கு கூடியிருந்த நூறுபேருக்கும் போதுமான உணவை இறைவன் வழங்குவார் என்று இறைவாக்கினர் எலிசா கடவுள் மீது வைத்த நம்பிக்கையை இன்றைய முதல் வாசகம் விவரிக்கிறது. போதுமான உணவு இருப்பதோடு மட்டுமல்ல. உண்டபின் மீதமும் இருக்கும் என்பதையும் அவர் அறிவார்.



Image: ©shutterstock.com

நற்செய்திப் பகுதியில் பசியோடு இருக்கும் மக்கள் மீது இயேசு பரிவிரக்கம் கொண்டு அவர்களுக்கு உணவளிக்க விரும்புகிறார். இருப்பினும் சீடர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. அவர்களிடம் போதுமான பணமும் இல்லை, அவ்வாறு வாங்கினாலும் அங்கு கூடியிருக்கும் ஐயாயிரம் பேருக்கு போதுமான உணவளிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். இருந்தும் இயேசு அவரின் தந்தையில் நம்பிக்கை வைத்திருக்கிறார். அவர் தந்தையிடம் மன்றாடி, நன்றிகூறி மேலும் அற்புதமான வகையில் அனைத்து மக்களுக்கும் உணவளிக்கின்றார். அங்கு கூடியிருந்தவர்கள் உண்பதற்கு மட்டுமல்ல அவர்கள் உண்டபின்னும் பன்னிரண்டு கூடைகள் நிறைய மீதமான உணவை அவர்கள் சேகரித்தனர்.

எலிசா மற்றும் இயேசுவின் சீடர்கள், அங்கிருந்த அனைத்து மக்களுக்கும் போதுமான உணவு கிடைக்கும் என்று நம்பவில்லை. வேறுவிதமாக கூறவேண்டுமென்றால், கடவுள் அவர்களின் தேவையை நிறைவு செய்வார் என்ற நம்பிக்கையில் அவர்களுக்குக் குறைபாடு இருந்தது. முடியாது என்ற நிலை வரும்போது, மனிதர்கள் இவ்வாறு அவநம்பிக்கைக் கொள்வது இயல்புதான். நம்மிடம் இல்லாதபோது எவ்வாறு பலருக்குத் தரமுடியும்? ஆனால், **“கடவுளில் நம்பிக்கை வைக்கும்போது, அவரால் இயலாதது என்று ஒன்றும் இல்லை”**

கடவுள் நமக்கு வழங்குவது உணவு மட்டுமல்ல; பிற பொருட்களும் தான். அவை அனைத்தையும் தாண்டியது. ஏனென்றால் கடவுள் நமக்குத் தரும் வாழ்வை நிறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.(யோவான்:10:10) இதன்பொருள், வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நாம் நிறைவைப் பெறவேண்டுமென்று விரும்புகிறார். இழப்பை அனுபவித்தவர்கள், அல்லது உடைந்தபோன உறவுகளில் வாழ்பவர்கள், உடைந்த உள்ளத்தினர் ஆகியோருக்கு கிறிஸ்து கூறுகிறார்: உங்களுக்குப் போதுமானவை கிடைக்கப்பெறும். மேலும் எதையும் நீங்கள் இழந்துபோக மாட்டீர்கள். அவருடைய சகோதர சகோதரிகளின் அழுகுரலை அவர் கேட்கிறார். நம்முடைய துன்பங்களை அவர் சுமந்துகொண்டு தொடர்ந்து நம்முடன் நிலைத்திருக்கிறார். அவர் குறித்த நேரத்தில் அனைத்தையும் சாத்தியமாக்குவார்!

நம்மால் இயலாதது உண்மையில் கடவுளுக்கு இயலும் என்பதில் நம்பிக்கை வையுங்கள் ✠

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர்; அவர்தம் செயல்கள் யாவும் இரக்கச் செயல்களே”

(திருப்பாடல்:145:17)

**இன்றைய வாசகங்கள்:**

2 அரசர் 4: 42-44

திருப்பாடல்: 145:10-11, 15-18

எபேசியர்: 4: 1-6

யோவான்: 6:1-15

INTERNAL CIRCULATION ONLY

BUL 30/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org